**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**
**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNNS 2023, and Rule 42 and Judicial

Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 144/2015 P.W.6/L.W.10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. சுரேஷ்குமார் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 29.10.2024.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் தற்பொழுது தூத்துக்குடி மாவட்டம் சாத்தன்குளம் காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.08.2014ம் தேதி கருங்கல் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது காலை 11.30 மணிக்கு நிலையப் பொறுப்பில் இருந்த போது மங்கலகுன்று, கொம்பன்விளை, செல்லப்பன் மகன் துரைராஜ் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று அதன் தன்மைப்படி காவல்நிலையக்குற்ற எண். 472/2014 சட்டப்பிரிவுகள் 304 எ இ.த.ச 1860ன் கீழ் வழக்குப்பதிவு செய்தேன். **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் மனுவை கனம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தும் ஒரு நகலை விசாரணைக்காக ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை** :

புகார்தாரருடன் யார் யார் வந்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. புகார் மனுவை வரும்போது எழுதிக்கொண்டு தான் வந்தார்கள். கருங்கல் அன்னை மருத்துவமனையிலிருந்து எனக்கு எந்த ஒரு தகவலும் வரவில்லை என்றால் சரிதான். முத்து நீயூரோ மருத்துவமனை, திருவனந்தபுரம் கிம்ஸ் மருத்துவமனையிலிருந்தும் எந்த தகவலும் வரவில்லை என்றால் சரிதான். மேற்படி விபத்தில் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கும் காயம் இருந்தது என்றால் சரிதான்.

2. குற்றம் சுமத்தப்பட்ட நபர் சிகிட்சைக்கு சேர்ந்த திரவியம் மருத்துவமனையிலிருந்தும் எங்களுக்கு எந்த தகவலும் வரவில்லை என்றால் சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபரிடமிருந்து எந்த புகாரும் வாங்கவில்லை என்றால் சரிதான். இறந்துபோன நபருக்காக குற்றம் சுமத்தப்பட்ட நபர் கொடுத்த புகாரின் பதிவுச் செய்யாமல்

உண்மைக்கு மாறான தகவலுடன் முதல் தகவல் அறிக்கை பதிவுச் செய்தேன் என்றால் சரியல்ல.  முதல் தகவல் அறிக்கையானது நீதிமன்றத்திற்கு 08.09.2014ம் தேதி தான் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான்.  நான் எனது மேலதிகாரிகளுக்கு அன்றையதினமே மேற்படி வழக்கு கோப்பை விசாரணைக்காக வைத்துவிட்டேன்.
குறுக்கு விசாரணை – முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.